நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 348 /2023

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜெகதீசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜு |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 66 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.13 PM

1. நான் தற்போது காவேரி நகரில் குடியிருந்து வியாபாரம் செய்து வருகிறேன். எதிரி கந்தசாமி மேட்டுர் நகராட்சியில் மேஸ்திரியாக வேலை பார்த்து வந்தார். நகராட்சிக்கு போய்வந்த வகையில் அவர் பழக்கம். கடந்த 2016 ம் வருடம் மேற்படி எதிரி கந்தசாமியிடம் ரூ. 2,00,000/–மாதம் நூற்றுக்கு ரூ. 1.50 என்ற

விதத்தில் வட்டிக்கு கடன் வாங்கியிருந்தேன். மாதம் மாதம் வட்டி செலுத்தி வந்தேன். இரண்டு மாதம்தான் மேற்படி வட்டி விதத்தில் வட்டி வாங்கினார். அதன் பிறகு மாதம் ரூ. 100க்கு 5 ரூபாய் என்ற விதத்தில் வட்டி செலுத்த வேண்டும் என்று சொன்னார். மேற்படி நான் கடன் வாங்கும்போது பிராமிசரி நோட்டில் ஒரு கையெழுத்தும், ஒரு முத்திரை தாளில் ஒரு கையெழுத்தும், ஒரு வெற்றுத்தாளில் ஒரு கையெழுத்தும் நான் வாங்கிய கடன் தொகைக்கு ஆதராவாக கொடுத்திருந்தேன்.

2. நான்பணம் வாங்கும்போது மேற்படி 5ரூபாய் வட்டி கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. நான் அது பற்றி கேட்டபோது வெளியில் எல்லாம் அவ்வாறுதான் வட்டிக்கு கொடுக்கிறார்கள்என்று சொன்னார். நானும் விரைவில் கடனை திருப்பி அடைத்துவிடலாம் என்ற நம்பிக்கையில் 2020 ம் வருடம் வரை மேற்கண்டவாறு வட்டி செலுத்தி வந்தேன்.

3. மேற்படி கடனுக்கு நான் அசல் எதுவும் செலுத்தவில்லை. கொரோனாவிற்கு பிறகு எனது வியாபரத்தில் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டதால் என்னால் வட்டி கொடுக்க முடியவில்லை. கடந்த 12.05.2022 ம் தேதி எதிரி கந்தசாமி எனது வீட்டிற்கு வந்து வட்டியும் கொடுக்கவில்லை, அசலும் கொடுக்கவில்லை உன்னை என்ன செய்கிறேன் பார் என்று வீட்டில் வந்து சத்தம் போட்டார்.

4. அவ்வாறு வாக்குவாதம் நடக்கும்போது நீங்கள் ரூ.1.50 வட்டி என்று சொல்லிவிட்டு ரூ.5 வட்டி வாங்கியுள்ளீர்கள், அதை கணக்கு போட்டு பாருங்கள் அசல் தொகை கழிந்திருக்கும் என்றுக்கூட நான் சொன்னேன். அவ்வாறு சொன்னதற்கு உன்னால் முடிந்ததை நீ பார், என்னால் முடிந்ததை நான் பார்த்துக்கொள்கிறேன் என்று அவர் சொன்னார்.

5. மேற்படி சம்பவம் நடக்கும்போது என்னுடைய ஒட்டுநர்கள் சண்முகம் மற்றும் ராஜா ஆகியோர் அங்கிருந்தார்கள். எனது மனைவி புவனேஸ்வரி அப்போது வீட்டிற்குள் வேலை செய்துக்கொண்டிருந்தார். அதன் பின்னர் கந்தசாமி அந்த இடத்திலிருந்து கிளம்பி விட்டார். நான் அவர் மிரட்டியதன் அடிப்படையில் கோர்டு கேஸ் என்று போவாரா அல்லது அடியாட்களை கூட்டி வருவாரா என்று

பயந்துக்கொண்டு மேட்டுர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன்.

6. என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது மேற்கண்டவாறு நான் கொடுத்த புகார்தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் வட்டி தொகையை ரொக்கமாகத்தான் செலுத்தி வந்தேன். ஒரு சில மாதம் ரூ.5000/- வீதம் இரண்டு தவணைகளாக மாதம் ரூ.10000/- ம் ஒரு சில மாதம் ரூ. 10000/- ம் வட்டியாக கொடுத்துவந்தேன். அதற்கு அவர் ரசீது எதுவும் கொடுக்க மாட்டார்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 01.30 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 348 /2023

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சண்முகம் |
| தந்தை / கணவர் பெயர் | : | இலட்சுமணன் |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.31 PM

1. நான் மேட்டுர் VPK நகரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 ஜெகதீசன் என்பவரிடம் 2020 ம் வருடம் முதல் 4 வருடம் அவர் வைத்திருந்த டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுநராக வேலை செய்து வந்தேன். இந்த வழக்கு சம்பவத்தின்போது இந்த வழக்கின் எதிரி கந்தசாமியை நான் பார்த்தேன்.

2. தற்போது பார்த்தால் என்னால் அவரை அடையாளம் சொல்லமுடியும். அ.சா.1 ஜெகதீசன் ரூ. 2 இலட்சம் கடன் வாங்கியிருந்தார். 2022 ம் வருடம் ஒரு நாள் காலை சுமார் 11.30 மணிக்கு அ.சா.1 ஜெகதீசன் வீட்டிற்கு எதிரி கந்தசாமி வந்து பணம் கொடுத்துவிட்டேன் என்று அ.சா.1 ஜெகதீசன் சொல்லவும், இல்லை நீ இன்னும் கொடுக்க வேண்டும் என்று எதிரி கந்தசாமி சொல்லவும் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

3. என்ன பேசிக்கொண்டார் என்று நான் சரியாக கவனிக்கவில்லை. கேட்டதற்கு பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை என்று சொன்னார். எதிரி கந்தசாமி சண்டை போட்டுவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். மறுநாள் 2 போலீசார் வந்து சம்பவம் குறித்து என்னையும் சம்பவத்தின்போது என்னுடன் இருந்த மற்றொரு ஓட்டுநர் ராஜா என்பவரையும் விசாரித்தார்கள்.

4. மேற்படி அ.சா.1 ஜெகதீசன் வீட்டில்தான் சமையல் எண்ணெய் வியாபாரம் செய்து வந்தார். மேற்படி சம்பவயிடத்தில் இருந்த வகையில் மேற்கண்ட சங்கதிகள் எனக்கு தெரியும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்த தேதி, மாதம் எனக்கு தெரியாது. வருடம் மட்டும்தான் எனக்கு தெரியும். என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. வேகமாக பேசிக்கொண்டார்கள். கடன் வாங்கியது எனக்கு நேரடியாக தெரியாது. வட்டி கொடுப்பதை அவ்வப்போது பார்த்திருக்கிறேன்.

2. தொழிலுக்காக அ.சா.1 ஜெகதீசன் நிறைய நபர்களிடம் கடன் வாங்குவார் என்றால் சரிதான். யார்யாரிடம் கடன் வாங்கியுள்ளார் என்றால் அ.சா.1 ஜெகதீசனின் உடன்பிறந்த அக்காவிடம் கைமாற்றாக கடன் வாங்குவார். அ.சா.1 ஜெகதீசனிடம் எண்ணெய் வாங்க தினமும் நிறைய நபர்கள் வருவார்களா என்றால் வருவார்கள். அ.சா.1 ஜெகதீசனின் மனைவி அதே வீட்டில் மளிகைக்கடை வைத்துள்ளார்.

3. மேற்படி அ.சா.1 ஜெகதீசனிடம் பொருட்களை ஏற்றுவது இறக்குவது சரக்குகளை

எடுத்துவருவது வாகனத்தை ஓட்டுவது உள்ளிட்ட வேலைகளை செய்து வந்தேன். காலை 09.30 மணிக்கு வேலைக்கு வருவேன். இரவு எவ்வளவு நேரம் ஆகுமென்று குறிப்பாக சொல்லமுடியாது.

4. கடைக்கு வரும் போகும் நபர்கள் அ.சா.1 ஜெகதீசனிடம் என்ன பேசுவார்கள் என்று நான் தெரிந்துக்கொண்டதில்லை. அ.சா.1 ஜெகதீசன் திராவிட முன்னேற்ற கழகத்தில் மேட்டுர் நகர பொறுப்பாளராக உள்ளார் என்றால் சரிதான். சம்பவம் நடக்கும்போது கடைக்கு வெளியே இருந்தேன். கடைக்குள்ளேயே இருந்து பேசிக்கொண்டு வெளியே வந்தார்கள்.

5. வண்டியை வேப்பமரத்திற்கு அடியிலும் பன்னீர்செல்வம் மெத்தை வீட்டிற்கு ஓரமாகவும் நிறுத்துவோம். சம்பவத்தின்போது வண்டியை மேற்படி ஓரமாகத்தான் நிறுத்தியிருந்தேன். நான் வண்டியில் இருந்து லோடு இறக்கிகொண்டிருந்தேன். என்னுடன் ராஜாவும் லோடு இறக்கி கொண்டிருந்தார்.

6. நான் ஓட்டிவந்த வண்டியின் பதிவெண் எனக்கு மறந்துவிட்டது. அ.சா.1 ஜெகதீசன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. மறுநாள் சம்பவயிடத்தில் வைத்து போலீசார் விசாரணை செய்தனர். மறுநாள் மதியம் 01.00 மணி சுமாருக்கு போலீசார் வந்தனர். போலீசார் விசாரணையில் மேற்கண்டவாறுதான் சொன்னேன்.

7. நான் அ.சா.1 ஜெகதீசனிடம் வேலை செய்யவில்லை என்றாலும் அ.சா.1 ஜெகதீசன் அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள் என்றாலும் அதனால்தான் அவர் கொடுத்த பொய் புகாருக்கு அ.சா.1 ஜெகதீசன் அழைத்ததன் பேரில் ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் நான் அவ்வாறு வேலைசெய்திருந்தால் ஆட்டோவின் பதிவெண் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 01.55 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஓம்/—நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 348 /2023

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜா |
| தந்தை / கணவர் பெயர் | : | தேவராஜ் |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.56 PM

1. நான் தற்போது சமத்துவபுரத்தில் குடியிருந்து சொந்தமாக ஆட்டோ ஓட்டிவருகிறேன். நான் அ.சா.1 ஜெகதீசனிடம் 2021 ம் வருடம் முதல் 2023 ம் வருடம் வரை டிரைவராக வேலை செய்து வந்தேன். இந்த வழக்கின் எதிரி கந்தசாமியை சம்பவத்தின்போது எனக்கு தெரியும்.

2. கடந்த 12.05.2022 ம் தேதி என்று நினைக்கிறேன். காலை நேரத்தில் நேரம் சரியாக தெரியவில்லை. எதிரி கந்தசாமி எனது ஓனர் வீட்டுக்கு வந்து ஜெகதீசன் எங்கே என்று கேட்டார். நான் கூப்பிடுவதாக சொல்லி எனது ஓனரை கூப்பிட்டு விட்டேன். எதிரி கந்தசாமி பணம் வாங்கியிருந்தீர்கள் அல்லவா ஏன் வட்டி கட்டவில்லை என்று கேட்டார். அதற்கு அ.சா.1 ஜெகதீசன் முதலுக்கு மேல் வட்டி கட்டிவிட்டேன் என்று சொன்னார். அதற்கு கந்தசாமி இல்லை இன்னும் அசலும் வட்டியும் வேண்டும் என்று சொன்னார்.

3. வேறு என்ன பேசினார்கள் என்று நான் கவனிக்கவில்லை. அ.சா.1 ஜெகதீசன் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக சொன்னார். சம்பவயிடத்தில் வேறு ஒரு நபர் இருந்தார். ஆனால் அவர் யாரென்று நான் கவனிக்கவில்லை. சம்பவத்திற்கு மறுநாள் போலீசார் என்னையும், என்னுடன் வேலைசெய்யும் சண்முகம் என்பவரையும் விசாரித்தார்கள். சம்பவத்தின் போது என்னுடன் சண்முகமும் இருந்தார். அவரும் நானும் ஆயில் டின்களை வண்டியில் இருந்து இறக்கி வைத்துக்கொண்டிருந்தோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் அ.சா.1 ஜெகதீசனிடம் டிரைவராக ஓட்டிவந்த ஆட்டோவின் பதிவெண். TN 52 W 9534 ஆகும். மற்றொரு வண்டியின் பதிவெண் TN 52 W 6524 ஆகும். அந்த வாகனத்தை நான் வாங்கி தற்போது தனியாக தொழில் செய்து வருகிறேன்.

2. சம்பவம் அ.சா.1 ஜெகதீசனின் வீட்டிற்கு வெளியே நடைபெற்றது. வேப்பமரத்துக்கு அடியில் நடக்கவில்லை. அ.சா.2 சண்முகம் ஓட்டிவந்த டாடா ஏஸி வண்டியில் இருந்து லோடு இறக்கி கொண்டிருந்தோம். வேப்பமரத்திற்கு எதிரில் வீட்டிற்கு பக்கமாக வண்டியை நிறுத்தி லோடு இறக்கி கொண்டிருந்தோம்.

3. அ.சா.1 ஜெகதீசன் பணம் வாங்கியதை நான் நேரில் பார்க்கவில்லை. வட்டிக்கு வாங்கினாரா அல்லது கைமாற்றாக வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. நேரம் எனக்கு சரியாக

தெரியாது. எதிரி கந்தசாமி முதலில் அ.சா.2 சண்முகத்திடம் தான் கேட்டார். அதன்பிறகு என்னிடம் கேட்டார். நான்தான் உள்ளே சென்று அ.சா.1 ஜெகதீசனை அழைத்து வந்தேன். அழைத்துவந்துவிட்டு நாங்கள் செய்துவந்த வேலையை தொடர்ந்து செய்தோம் என்றால் சரிதான்.

4. நாங்கள் வேலை செய்துக்கொண்டிருந்ததால் அவர்கள் என்ன பேசிக்கொண்டிருந்தார்கள் என்று நான் சரியாக கவனிக்கவில்லை. அ.சா.1 ஜெகதீசன் எண்ணெய் மொத்த வியாபாரமாகவும், மளிகைக்கடை வைத்து தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான்.

5. மேலும் அ.சா.1 ஜெகதீசன் திமுக கட்சியில் உள்ளார். அன்றாடம் மேற்படி கடைக்கு அதிகமக்கள் தினமும் வருவார்கள் என்றால் சரிதான். கடைக்கு வந்துச்செல்லும் நபர்கள் என்ன பேசிக்கொள்வார்கள் என்பது பற்றி நாங்கள் கவனிப்பதில்லை என்றால் சரிதான்.

6. இந்த சம்பவம்பற்றி யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. மறுநாள் இரண்டு போலீசார் சம்பவயிடத்திற்கு விசாரணைக்கு வந்தார்கள். எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று சரியாக நியாபகம் இல்லை. காலை சுமார் 11.00 மணியிருக்கும்.

7. போலீசார் அப்போது விசாரிக்கும்போதும் மேற்படி விவரங்களைத்தான் நான் சொன்னேன். நான் அ.சா.1 ஜெகதீசனிடம் வேலை செய்யவில்லை என்றாலும் அ.சா.1 ஜெகதீசன் அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள் என்றாலும் அதனால் தான் அவர் கொடுத்த பொய் புகாருக்கு அ.சா.1 ஜெகதீசன் அழைத்ததன் பேரில் ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் நான் அவ்வாறு வேலைசெய்திருந்தால் ஆட்டோவின் பதிவெண் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 02.15 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.